ஆசிரியர்: ஏ.கஜன் B.A-Tam (Cont..)
TP: 077 2400 707

தமிழ்வழி பரீட்சைகள்

# முதலாம் தவணைப் பரீட்சை

தரம் 07

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil Language and Literature I, II

இரண்டு மணித்தியாலம்
Two hours

A/L Geography ACCOUNTING WORLD 2 ஆம் குறுக்கு வீதி, மன்னார்
இனிது கல்வி நிலையம் பாவிநகர், வவுனிக்குளம்
Personal & Group Class 6-11 - TAMIL A/L - GEOGRAPHY

தமிழ்வழி கற்றலுக்கான ஒளி

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

பரீட்சைத் தொடர் Examination Series 2

**கவனிக்க:**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்குரிய **புள்ளிகள்** 100 ஆகும்.
* 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
* அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பகுதி II இலுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

.......................................................................

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "சோலையைக் கண்ணுற்று மிகவும் களிப்படைந்தேன்" - இங்கு **களிப்பு** என்பதன் **ஒத்த சொல்**
   1. கோபம் 2. மகிழ்ச்சி 3. புகழ்ச்சி 4. இகழ்ச்சி

2. "ஆயும் மலர்ப்பொழில் செய்து வந்தேன்" - இங்கு **பொழில்** என்பது
   1. சோலை 2. பள்ளத்தாக்கு 3. காடு 4. சமவெளி

3. "அவன் வராதது எனக்கு அனுகூலமாக இருந்தது" - இங்கு **அனுகூலம்** என்பதன் எதிர்ப்பொருள்
   1. நன்மை 2. வசதி 3. ஏற்பாடு 4. பிரதிகூலம்

4. "எனது தங்கை கருங்குழலினை உடையவள்" - இங்கு **குழல்** என்பது
   1. இசைக்கருவி 2. முகம் 3. கூந்தல் 4. புன்னகை

5. "அவள் முகத்தில் களங்கமிருக்கவில்லை" - இங்கு **களங்கம்** என்பது
   1. கறை 2. புன்னகை 3. அழகு 4. உறுதி

6. உறவு முறைக் கடிதமொன்றின் உறுப்பு **அல்லாதது**
   1. முகவரி 2. உள் முகவரி 3. முடிப்பு 4. செய்தி

7. "இது பற்றி எனக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை" - இங்கு **ஆட்சேபனை** என்பது
   1. உடன்பாடு 2. மறுப்பு 3. விண்ணப்பம் 4. முறைப்பாடு

8. **புகலிடம்** என்பது
   1. சரணாலயம் 2. கற்குகை 3. வீடு 4. சோலை

9. அருகில் காட்டப்பட்டுள்ள **நிறுத்தற்குறியீடு** !
   1. அரைப்புள்ளி 2. முற்றுப்புள்ளி 3. முக்காற்புள்ளி 4. மெய்ப்பாட்டுக்குறி

10. காந்தியடிகளுக்கு **மகாத்மா எனும்** பட்டத்தை வழங்கியவர்
    1. திருலோகசீதாராம் 2. இரவீந்திரநாத் தாகூர் 3. H.M.P.மொஹிதீன் 4. கா.மாணிக்கவாசகர்

**11.** இன்ரநெற் ***(Internet)*** என்பதன் தமிழ் வடிவம்
1. இணையம் 2. அச்சுப்பொறி 3. வையக விரிவு வலை 4. வலைத்தளம்

**12.** **உயிர் நெடில்** எழுத்துக்களின் எண்ணிக்கை
1. **126** 2. **05** 3. **133** 4. **07**

**13.** ஐவகை நிலங்களிலும அடங்காதது
1. முல்லை 2. குறிஞ்சி 3. உவர் 4. மருதம்

**14.** உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் இணைவதால் பிறக்கும் எழுத்து
1. கிரந்த எழுத்து 2. உயிர் மெய் எழுத்து
3. தனி நெடிலெழுத்து 4. ஆய்த எழுத்து

**15.** **1875** ஆம் ஆண்டளவில் பயன்படுத்தப்பட்ட தட்டச்சுப் பொறி
1. ஸ்டான்டர்ட் 2. ரெமிங்டன் 3. எரிகா 4. யுரேனிகா

**16.** வாக்கியமொன்றில் கருத்து முற்றுப்பெறுமிடம் அழைக்கப்படுவது.
1. பயனிலை 2. எழுவாய் 3. செயப்படுபொருள் 4. அடைமொழி

**17.** **தமிழ்த் தட்டச்சின் தந்தை** எனும் கட்டுரை இடம்பெறுவது
1. இலக்கியப் படகு 2. குழந்தைச் செல்வம் 3. மலரும் மாலையும் 4. சரஸ்வதி களஞ்சியம்

**18.** "வெள்ளை முயல் துள்ளி ஓடியது" – இங்கு இடம்பெறும் **வெள்ளை** என்பது
1. இரட்டைக்கிழவி 2. அடைமொழி
3. றோஜா 4. அடுக்கிடுக்குத் தொடர்

**19.** பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்தாக **அமையாதது**
1. ஹ 2. ஸ்ரீ 3. ஷ 4. ண்

**20.** இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
1. அமுதவிழா 2. பௌர்ணமி விழா 3. வெள்ளி விழா 4. பொன் விழா

**(20 X 2 = 40 புள்ளிகள்)**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**01. முதலாம் தவணையில் பாடசாலையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) வகுப்பறையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை யாது?
2) மேற்குறித்த கணிப்பீட்டிற்காக ஆசிரியர் உமக்கு வழங்கிய தலைப்பு யாது?
3) ஆசிரியரால் உமக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் யாவை?
4) கணிப்பீட்டின் மூலம் நீர் அடைந்துகொண்ட நன்மைகள் யாவை?
5) கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது நீர் எதிர்கொண்ட பிரச்சினைகள் எவை?

**(10 புள்ளிகள்)**

**02. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1) **பந்தி** என்றால் என்ன?
2) கவிஞர். அழகசுந்தர தேசிகர் எழுதிய நூல்கள் **இரண்டு** தருக.
3) தீங்கிழைத்தவரைத் தப்பாமல் தண்டிக்கும் மிருகம் எது?
4) சிறைச்சாலையில் காந்தியடிகளுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருந்த வசதிகள் எவை?
5) முழு உரிமையாக நாம் பெற்றுக்கொண்ட செல்வங்கள் எவை? **(10 புள்ளிகள்)**

**03. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன என்பதை எழுதுக.**

1) "என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு எவ்வித அச்சமுமில்லை"
2) "நீ! நிரூபித்தது எவ்வளவு உண்மையாக இருக்கின்றது."
3) "நல்லதம்மா அப்படியே இருக்கிறேன்"
4) "சரி, நம் வீட்டில் இப்போது மூன்று பேர் இருக்கின்றோம்"
5) "நீர் பேசுவது விந்தையினும் விந்தை" **(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் தலைப்பில் 50 – 75 சொற்களில் அமையுமாறு கடிதம் எழுதுக.**

உமது பாடசாலையில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த கண்காட்சி நிகழ்வு தொடர்பில் வெளிநாட்டிலுள்ள உமது தந்தைக்கு ஓர் **கடிதம்.**

**(10 புள்ளிகள்)**

**05. பின்வரும் தலைப்புகளில் யாதேனும் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

**(அ)** எனக்கு இரண்டு சிறகுகள் முளைத்தால்......
**(ஆ)** சுற்றுச் சூழல் மாசடைதல்
**(இ)** உடைந்த குடையின் கதை
**(ஈ)** காட்டுவளத்தைப் பாதுகாப்போம் **(15 புள்ளிகள்)**

பெற்றோர் / பாதுகாவலர் ஒப்பம்

............................................